Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்றம் 22-11-1993 யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 07 | (22-11-93) | திங்கட்கிழமை | ஓசை 277

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்றம் 22-11-1993 யாழ்ப்பாணம்

## மீட்புநிதிக் கடன் மீளளிப்பு; வழங்கப்படும் இடங்கள்

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு நல்லூர், யாழ்ப்பாணம், காரைநகர், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1. 45 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்தும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு பிற்பகல் 4. 45 மணியளவில் நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் வைத்தும், உடுவில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் வைத்தும், மானிப்பாய், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு பிற்பகல் 4. 15 மணியளவில் (4ஆம் பக்கம்.பார்க்க)

### பூநகரித் தோல்வியின் எதிரொலி

# ராணுவ தளபதியின் திறமை குறித்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பு!

## தேவை எனின் புதியவரை நியமிக்குக!

(கொழும்பு)

**இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவின் திறமை குறித்து சில தினங்களின் முன் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இராணுவத் தளபதியால் உரியமுறையில் தமது பணியை நிறைவேற்ற முடியாது விட்டால், புதிய தளபதியை நியமித்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் எனவும் அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினரால் கோரிக்கையும் விடப்பட்டது.**

பூநகரியில் படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பைத் தொடர்ந்தே பாராளுமன்றத்தில் பேசிய ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான மதுருபாலஎதிரிவீர மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தவராவார்.

யுத்தத்தை நடாத்துவதற்கு இராணுவத்தளபதி ஒருவரை நாம் நியமித்துள்ளோம். அவருக்கு அதற்கான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவத் தளபதியால் உரிய முறையில் பணியை நிறைவேற்ற முடியாவிட்டால் புதிய தளபதி ஒருவரை நியமித்து யுத்தத்தை நாம் தொடர்ந்து நடாத்துவோம் என்றும்அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தில் வெற்றிகொள்வதற்காக தங்கள் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளை இடைநிறுத்தி அந்த நிதியை யுத்தத்துக்காக வழங்கவும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தை வெற்றிகொள் (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் மனோதிடத்தை புலிகள் உடைத்துவிட்டனர்

### பி.பி.ஸி. தெரிவிப்பு

(லண்டன்)

இந்த வருடம் பெரும் செலவுடன் எந்த முடிவும் இல்லா ... முன்னணி படைஅணிகள் மீது புலிகள் கொடுத்த அழுத்தத்தால் இராணுவம் அதன் ... க்கு ஏற்பட்ட பாரிய தோல்வி குறித்து இராணுவத்தின் உத்தியோக பூர்வ பேச்சாளர் ... இரு கோஷ்டிகளே செயற்படுகின்றது என்று வர்ணா கருணத்திலக்காவை மேற்கோள் ...

## திருமலையில் புலிகள் அதிரடி; இரு விமானப்படையினர் பலி

(திருமலை)

நேற்றுக்காலை மட்டக்களப்பிலும், திருக்கோணமலையிலும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதலில் இரு இராணுவ சிப்பாய்களும், இரு விமானப் படையினருமாக நான்கு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 8-45 மணியளவில் திருமலை மாவட்டம் பன்குளம் எடிக்கேசன் விமானப்படை முகாமிலிருந்து ரோந்துவந்த விமானப்படையினரே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குஇலக்காகினர். முகாமிலிருந்து 300 மீட்டர் தூரத்தில்வைத்து ரோந்து வந்த இந்த 5 விமானப் படையினரும் தாக்கப்பட்டனர். இதில் இரு விமானப் படையினர் பலியாகினர். ஏனையோர் படுகாயமடைந்தனர் விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

இத் தாக்குதலையடுத்து விமானப்படையினரிடமிருந்து;

- ரி-81 ரக துப்பாக்கி -02
- ரவைக்கூடுகள் -16
- ஜே ஆர் குண்டு -04
- ஐ எம் ரவை -320
- றெயின்கோட் -07
- இராணுவப்பட்டி -02
- ஏ கே கோல்சர் -02
- தண்ணீர்க்கான் -01
- தொப்பி -01
- தலைக்கவசம் -01

என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன

## மட்டக்களப்பில் அதிரடிக்கு இரு இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர், மட்டக்களப்பில் ரோந்துசென்ற இராணுவத்தினர்மீது புலிகள் ... இராணுவ சிப்பாய்கள் பலியானதாகத் தெரிவித்தார்.

### காயமடைந்தவர் மரணம்

யாழ். செயலகம் மீது கடந்த 12-ம் திகதி நடைபெற்ற சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்

### கிளாலியில் ஹெலித்தாக்கு

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்றுக் காலை 11. 30 மணியளவில் கிளாலி, கச்சாய்ப் பகுதிகளில் கலிபர்தாக்குதலை நடத்தியது பின்னர் கொடிகாமம்பகுதியையும் பலதடவை சுற்றி நோட்டமிட்டுச்சென்றது(86

### ஊரடங்கு தொடர்கிறது

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்அமுலிலிருந்த ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6 மணிமுதல் நீக்கப்படுகிறது என பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் அறிவித்துள் (4ஆம் பக்கம் பார்க்க)

புதிய தளபதியை நியமித்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும்
அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினரால் கோரிக்கையும் விடப்பட்டது.

பூநகரியில் படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பைத் தொடர்ந்தே பாராளுமன்றத்தில் பேசிய ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான மதுருபாலஎதிரிவீர மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தவராவார்.

யுத்தத்தை நடாத்துவதற்கு இராணுவத்தளபதி ஒருவரை நாம் நியமித்துள்ளோம். அவருக்கு அதற்கான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவத் தளபதியால் உரிய முறையில் பணியை நிறைவேற்ற முடியாவிட்டால் புதிய தளபதி ஒருவரை நியமித்து யுத்தத்தை நாம் தொடர்ந்து நடாத்துவோம் என்றும்அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தில் வெற்றிகொள்வதற்காக தங்கள் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளை இடைநிறுத்தி அந்த நிதியை யுத்தத்துக்காக வழங்கவும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தை வெற்றிகொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தின் மனோதிடத்தை புலிகள் உடைத்துவிட்டனர்

## பி.பி.ஸி. தெரிவிப்பு

(லண்டன்)

இந்த வருடம் பெரும் செலவுடன் எந்த முடிவும் இல்லாமல் முடிவடைகிறது. இராணுவம் அதன் மனோதிடத்தை இழந்துள்ளது பூநகரியில் போருக்கு முன்பும் இராணுவ முன்னணி படைஅணிகள் மீது புலிகள் கொடுத்த அழுத்தத்தால் இராணுவம் அதன் மனோதிடத்தை இழந்திருந்தது என பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

பூநகரியில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பாரிய தோல்வி குறித்து இராணுவத்தின் உத்தியோக பூர்வ பேச்சாளர் எதுவும் கூற மறுத்து விட்டார் என பி.பி.ஸி. மேலும் அறிவித்தது.

மேலும் இராணுவத்தின் உட்பூசலே இராணுவத்தின் திறமைக் குறைவுக்குக் காரணமாகும் என்று இராணுவ விமர்சகர் வர்ணா கருணத்திலக்கா தெரிவிக்கிறார்

இராணுவத் தலைமை தங்களுக்கிடையில் சண்டையிடுவதிலேயே காலத்தைக் கழிக்கிறது. இராணுவத்தில் ஒருவரை ஒருவர் காலை வாரும் நிலைமையுள்ளது. இரு கோஷ்டிகளே செயற்படுகின்றது என்று வர்ணா கருணத்திலக்காவை மேற்கோள் காட்டி பி.பி.ஸி.அறிவித்தது

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ஆயுதங்களை இழந்தது கற்பனைக்குஎட்டாதவிடயம்

### சிரேஷ்ட இராணுவ அதிகாரி

(கொழும்பு)

எமது தரப்பில் உயிரிழப்புகள் ஏற்பட்டதிலும் பார்க்க ஆயுதங்களை பெருமளவில் இழந்தது கற்பனைக்கு எட்டாத விடயமாகும்.

இவ்வாறு சிறிலங்கா சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பூநகரி - நாகதேவன்துறை தாக்குதல் சம்பவம் பற்றி தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதே வேளை சில இராணுவத்தினர் போர் சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதில் மௌனம் சாதிக்கின்றனர். மேலிடத்திலிருந்து வந்த உத்தரவே தங்கள் மௌனத்திற்கு காரணம் எனத் தெரிவித்தனர் என ''ஐலண்ட்'' செய்தி இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஆபத்தை உணர்ந்து கடலில் குதித்து தப்பினேன்

### பூநகரியில் தப்பிய கடற்படை சிப்பாய்

(கொழும்பு)

இரவு 1.00மணியளவில் புலிகள் கடல்மார்க்கமாகவும் தரைப்பக்கத்திலிருந்தும் சரமாரியாகச் சுட்டனர். எமக்கு வரும் ஆபத்தை உணர்ந்து நீரில்குதித்து தப்பினேன்

இவ்வாறு பூநகரி - நாகதேவன்துறையிலிருந்து தப்பி ஆனையிறவு முகாமிற்குவந்து சேர்ந்த பத்மசிறி என்ற கடற்படை சிப்பாய் தெரிவித்துள்ளார்

நானும் மேலும் ஆறு படையினரும் கடற்படை படகில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தோம் இரவு 1.00மணியளவில் புலிகள் திடீர் என்று சரமாரியாகச் சுடத்தொடங்கினர்

சிறிது நேரத்தில் தரைமார்க்கமாகவும் புலிகள் வந்ததை உணர்ந்து கொண்டோம்

மழை மற்றும் இருள் காரணமாக எமக்கு ஒன்றுமே புலப்படவில்லை. தரைமார்க்கமாகச் சண்டை நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரப்புக் கடந்தானில் 'புக்காரா' தாக்குதல்

(மன்னார்)

நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்தில் 'புக்காரா' விமானம் ஒன்று குண்டுகளை வீசியது. காலை 8 மணியளவில் பரப்புக்கடந்தான் பகுதியை வட்டமிட்ட புக்காரா மூன்று குண்டுகளை வீசியது. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## எறிகணை வீச்சினால் மாதா கோவில் சேதம்!

(குருநகர்)

நேற்று அதிகாலை 2. 35 மணியளவில் சிறிலங்கா ராணுவம் நிலை கொண்டுள்ள மண்டை தீவு பகுதியில் இருந்து ஏவப்பட்டஎறிகணைகளில் ஒன்று குருநகர் புனித உத்தரிய மாதா தேவாலயத்தை சேதப்படுத்தியுள்ளது.

மற்றொரு எறிகணை றெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியிலுள்ள தேவதாஸ் என்பவரது வீட்டில் விழுந்து வெடித்து வீட்டைச் சேதப்படுத்தியது.

வீட்டில் எவரும் இல்லாததால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

உத்தரிய மாதா ஆலயத்தில் வீழ்ந்த எறிகணையால் ஆலயத்துள் இருந்த கல்லறை ஆண்டவர், புனிதஅந்தோனியார், உத்தரிய மாதா

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலைப்பகுதி கடலில்

## துப்பாக்கிச் சூட்டிற்கு மீனவர் ஒருவர் பலி!

(தொல்புரம்)

காரைநகர்வலந்தலைஇராணுவ முகாமின் காவலரணிலுள்ள இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்டதில் பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 5. 15 மணியளவில் நடந்த இச் சோக சம்பவத்தில் காரைநகர் பலகாட்டைச் சேர்ந்தவரும் தற்போது தொல்புரம் பூதராசி இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்து வந்த இளம் குடும்பஸ்தரான சோமுகுணம் (வயது28) என்பவரே துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இச்சம்பவம் நடந்தவேளை பல மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததாகவும், அவ்வேளை பொன்னாலை காரைநகர் பாலத்தில்பதுங்கி

(4ஆம் பக்கம் பார்க்சு)

ளப்பிலும், திருக்கோணமலையிலும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதலில் இரு இராணுவ சிப்பாய்களும், இரு விமானப் படையினருமாக நான்கு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 8-45 மணியளவில் திருமலை மாவட்டம் பன்குளம் எடிக்கேசன் விமானப்படை முகாமிலிருந்து ரோந்துவந்த விமானப்படையினரே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குஇலக்காகினர். முகாமிலிருந்து 300 மீட்டர் தூரத்தில்வைத்து ரோந்து வந்த இந்த 5 விமானப் படையினரும் தாக்கப்பட்டனர். இதில் இரு விமானப் படையினர் பலியாகினர் ஏனையோர் படுகாயமடைந்தனர் விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை

இத் தாக்கு தலையடுத்து விமானப்படையினரிடமிருந்து;

- ரி-81 ரக துப்பாக்கி -02
- ரவைக்கூடுகள் -16
- ஜே ஆர் குண்டு -04
- ஐ எம் ரவை -320
- றெயின்கோட் -07
- இராணுவப்பட்டி -02
- ஏ கே கோல்சர் -02
- தண்ணீர்க்கான் -01
- தொப்பி -01
- தலைக்கவசம் -01

என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன

## மட்டக்களப்பில் அதிரடிக்கு இரு இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர், மட்டக்களப்பில் ரோந்துசென்ற இராணுவத்தினர்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவ சிப்பாய்கள் பலியானதாகத் தெரிவித்தார்.

## காயமடைந்தவர் மரணம்

யாழ். செயலகம் மீது கடந்த 12-ம் திகதி நடைபெற்ற சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் வாரம் உணர்வுபூர்வ ஆரம்பம்; வடபகுதி எங்கும் எழுச்சிகர ஏற்பாடு

தமிழீழ மாவீரர் வாரம் நேற்றுத் தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகியது. தமிழீழத்தின் தேசியக்கொடி ஏற்றப்பட்டதுடன் மாவீரர் வார அஞ்சலி நிகழ்வுகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகின.

தமிழீழத் தாயக விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம்செய்த மாவீரர்களை நினைவுகூருவதற்காக அனுஷ்டிக்கப்படும் இம்மாவீரர் வாரம் நேற்றுமுதல் வரும் 27-ம்திகதிவரை மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்றுக்காலை சரியாக 9.00 மணிக்கு தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழீழத்தின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து கொடி வணக்கமும், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டன.

குறிப்பாக யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகள் உட்பட வன்னிப் பிராந்தியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இம்மாவீரர் வாரம் எழுச்சியுடன் ஆரம்பமாகியுள்ளது.

இப்பகுதிகளிலுள்ள அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் தனியார்அலுவலகங்கள், பாடசாலைகள், கல்விக்கூடங்கள், வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொதுசன மையங்கள், மக்கள் கூடும் இடங்கள, விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள், பாசறைகள் ஆகியவற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மாவீரர் தினம்; குழப்பவந்த ராணுவத்துடன் மோதல்!

(திருமலை)

திருமலை மாவட்டம் வெருகல் பகுதியில் மாவீரர் தின ஏற்பாடுகளை குழப்பும் நோக்கில் முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்று வெருகல் முகத்துவாரம் பகுதியில் மாவீரர் வாரத்தையொட்டி வீதிகளும் அலங்கரிக்கப்பட்டு மதியம் அளவில் பொதுக் கூட்டம் ஒன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வேளையில் வெருகல், ஈச்சிலம்பத்தை 49ஆம் கட்டை, இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் முன்னேறி வந்தனர். முட்டிச்சேனை, வாழைத் தோட்டம் ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது காலை 9 40 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதலை தொடுத்தனர் முட்டிச்சேனை பாலத்தில் வைத்து புலிகள் மேற்கொண்ட 45 நிமிடநேர தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி முட்டிச்சேனை நோக்கி சென்றுவிட்டனர்

மீண்டும் காலை 10.30மணி

(4ஆம் பக்கம் பார்க்க)


மாவீரர்நாள் நவம்பர்-27

படைபலம் பெருக்குவோம்!
தடைகளை உடைப்போம்!
பொங்கும் பெருவெள்ளமென
எங்கும் அணிதிரள்வோம்

சுன்னாகம் வர்த்தக சங்கம்.

(6657)

## வரி விளம்பரம்

### "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் நாடக்கு சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்க 'கொழும்பில் கல்யாணம்'' நாடகக்தை எழுதித் தயாரிக்க ஆசிரியர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1. செட்டிக்காரர்கள், 2. முதலாம்பிள்ளை 30/-
(6439)

### கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்க்கான நவம்பர்மாத கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது.
(22)

### முதலிடம் பெற்றார்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டத்திலான ஆங்கில எழுத்துப் போட்டியில் (5ஆம் ஆண்டு) வட்டுக்கோட்டை துணவி அ. மி. த.க. பாடசாலை மாணவன் செல்வன் இ. ரமேஷ் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

### பணவீக்க காரணம்

சிறிலங்காவில்நிலவும் பணவீக்கத்திற்கு பாதுகாப்பு செலவின் அதிகரிப்பே காரணம் என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில், வெளிநாட்டு நாணயமாற்று சம்பாதிப்பு தற்போது அதிகரித்து வருகிறது. வெளிநாடுகளில் வேலை செய்வோர் அதிகரிப்பே இதற்கு காரணம் ஆகும் பாதுகாப்பு செலவுகளும் சமூகநலஅபிவிருத்திச் செலவுகளும் அதிகரித்து வருவதே பணவீக்கத்திற்கு காரண

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மடியில் மலராக:
22 — 11 — 1970

மண்ணில் விதையாக:
22 — 11 — 1990

மாங்குளம் சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த

**2-ம் லெப்டினன்ட் கிரிஜா**
**(சுந்தரம் இரட்ணவதி)**

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உன் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது. உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திககின்றோம்.

கேணியடி,
இமையாணன். (6629) - குடும்பத்தினர்

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில்: 06 - 12 - 1966



தாயக மண்ணில்: 22 - 11 - 1987

**வீரவேங்கை அசோக் - யூட்**
**(மயில்வாகனம் சந்திரசேகர்)**

ஆண்டுகள் ஆறாக எம் மனதில்
நீண்டு வரும் துயர் தீராது...
மாண்ட நின் கனவுகள் வையமதில்
மீண்டும் உயிர்பெற உழைக்கின்றோம் - இம்
மண்ணினை மீட்கும் நாள் வரும் - உன்
எண்ணம் நிறைவெய்தும் - அமைதி கொள்வாய்

22-11-1993இல் (இன்று) நடைபெறும் வீட்டுக்

## நினைவு கூருகின்றோம்.

**22-11-1993**

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - களுதாவளைப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்,

1986ஆம் ஆண்டு ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

பிரதேச படைத்தளபதி-

★ **சந்திரன்/ ஸ்ரீபன்** (செல்வநாயகபுரம் - திருமலை)

பிரதேச உதவிப் படைத் தளபதி

★ **தியாகு டேவிட்** (முருங்கன் - மன்னார்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால்கைதாகி கொலை செய்யப்பட்டு எம்மைப்பிரிந்த-

**மதன்** (- சேகர் மன்னார்)

1987ஆம் ஆண்டு சாவகச்சேரி பேரூந்து நிலையத்தின்மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண்அடைந்து வீரச்சாவெய்திய-

**அசோக்/யூட்** (மயில்வாகனம் சந்திரசேகர் - அம்பனை, தெல்லிப்பழை - யாழ்)

1988ஆம் ஆண்டு கைதடிப்பாலத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**துர்க்கா/பரதர்** (பரஞ்சோதி சுகுமார் - நாவற்குழி கிழக்கு - யாழ்)

வவுனியாவில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான:

**பூலோகசிங்கம்**

பாவற்குளம் 4-ம் படிவம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**ந. பாலகுரு**

1990ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**2-ப் லெப். அலன்** (செபஸ்ரியான் கமலலோஜன் உடப்பு - புத்தளம்)
**தமிழ்ச்செல்வி** (சுமங்களா சதாசிவம் - அக்கரைப்பற்று - அம்பாறை)
**2-ம் லெப். டெனி** (நடராசா உருத்திரமூர்த்தி நொச்சிக்குளம் - பன்குளம் - திருமலை)
**லோகன்** (இரத்தினசிங்கம் புவனேந்திரன் -கிளிவெட்டி, மூதூர் திருமலை)
**கப்டன் வதனன்** (தங்கராசா ராஜேஸ்வரன் - குமுழமுனை-மணலாறு)
**2-ம் லெப்.அருணா** (அந்தோனிப்பிள்ளை விஸ்வராஜ் அளம்பில் - மணலாறு)
**2-ம் லெப்.நிராஜ்** (செல்லத்துரை சிவநேசச் செல்வன் - நெடுங்கேணி - மணலாறு)
**2-ம் லெப். மகான்** (பாலசுந்தரம் . பாலவரதன் முள்ளியவளை - முல்லைத்தீவு)
**டயானா** (கவிதா தங்கராசா - குகன் தோட்டம், அளம்பில் - மணலாறு)
**பெனாசீர்** (ஜமுனா சிவபாதலிங்கம் - 5-ம் கட்டை அளம்பில் - மணலாறு)
**அன்பழகன்** (மாயாண்டி பாலகிருஷ்ணன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)
**தனராஜ்** (சி ஆனந்தராஜ் - ஒட்டிசுட்டான் -முல்லைத்தீவு)
**பிரதீப்** (- ஆனந்தராஜ் - மணற்குடியிருப்பு-முல்லைத்தீவு)
**கரன்** (ச நவரத்தினம் - அளம்பில் - மணலாறு)
**ரமணன்** (ஜோசப் ஜெயரட்ணம்-பிரம்மந்தனாறு-

## அறிவித்தல்

விழிப்புலவலு இழந்தோர் (கண்பார்வையற்றோர்) அனைவரையும் கீழ்க்காணும் தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலகங்களில் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தலைமைச் செயலகம் கொக்குவில்
,, காங்கேசன்துறைவீதி, சுன்னாகம்
,, மந்திகை, பருத்தித்துறை
,, மருதங்கேணிவீதி, நாகர்கோவில்
,, கண்டிவீதி, சாவகச்சேரி
,, கண்டிவீதி, பளை
,, பண்டிதர் குடியிருப்பு, கெற்பேலி

(6646)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 30 - 09 - 1971



வீரச்சாவு: 22 - 11 - 1990

**வீரவேங்கை ரசிக்கா**
**(யாழினி சத்தியநாதன்)**

வேம்படி தனிலே கல்வியைப் பயின்றாய்
வேங்கையாய் நீயும் களத்தினில் பாய்ந்தாய்
தாங்கிய கொள்கை சரிந்திடாக் காத்தாய்
தாயகம் மீட்டிட இன்னுயிர் ஈந்தாய்
மாவீரர் வாழ்வாகி மண்தனை காத்திட
மாங்குளத்தில் விதையான மங்கையே ரசிக்கா
தங்கத் தமிழீழம் மலர்ந்திடும் வேளையில்
தாயகம் உந்தன் பெயரையும் உரைக்கும்

9/6 மகேந்திரன் வீதி,
அரியாலை. (6659) - குடும்பத்தினர்

## வீரவணக்கம்





சிறிலங்காவில் நிலவும் பணவீக்கத்திற்கு பாதுகாப்பு செலவின் அதிகரிப்பே காரணம் என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில், வெளிநாட்டு நாணயமாற்று சம்பாதிப்பு தற்போது அதிகரித்து வருகிறது. வெளிநாடுகளில் வேலை செய்வோர் அதிகரிப்பே இதற்கு காரணம் ஆகும் பாதுகாப்பு செலவுகளும் சமூகநல அபிவிருத்திச் செலவுகளும் அதிகரித்து வருவதே பணவீக்கத்திற்கு காரணமாகும் என்றும் பணவீக்கத்தை குறைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் நல்ல பலனை தந்துள்ளன என்றார்.

## இருவார நிவாரணம் விநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நவம்பர் மாத முதல் இரு வாரங்களுக்குமான இலவச உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறை மேற்படி உலர் உணவு விநியோகத்திற்கென அரிசி, மா, சீனி, மைசூர் பருப்பு, தேயிலை, செத்தல் மிளகாய் ஆகியன வழங்கப்படவுள்ளன

மேற்படி நவம்பர் முதல் இருவாரங்களுக்குமான இலவச உலர் உணவு விநியோகத்தை உடனடியாக வழங்குமாறு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பாளர் தேவை

வடமராட்சி, யாழ்ப்பாணக் கோட்ட தனியார் கல்வி நிலைய மேற்பார்வை செய்வதற்கு இணைப்பாளர்தேவை க. பொ. த. சாதாரணம், உயர்தரத்தேர்வில் சித்தியடைந்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 30.11 93க்குமுன்னதாக தனியார் கல்வி நிலைய மேற்பார்வையாளர் அலுவலகம், இல. 19, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதுடன், 3 12 93 வெள்ளிக்கிழமை மு ப. பத்து மணிக்கு நடைபெறவிருக்கும்நேர்முகத் தேர்வில் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் அனுபவம் மேலதிக தகைமையினை வெளிப்படுத்துவதற்கான சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுளனர். (ஆண்பாலாரே விண்ணப்பிக்க வேண்டும்)

---



தமிழீழ மண்ணில்: 06 - 12 - 1966

தாயக மண்ணில்: 22 - 11 - 1987

## வீரவேங்கை அசோக் - யூட்
### (மயில்வாகனம் சந்திரசேகர்)

ஆண்டுகள் ஆறாக எம் மனதில்
நீண்டு வரும் துயர் தீராது...
மாண்ட நின் கனவுகள் வையமதில்
மீண்டும் உயிர்பெற உழைக்கின்றோம் - இம்
மண்ணினை மீட்கும் நாள் வரும் - உன்
எண்ணம் நிறைவெய்தும் - அமைதி கொள்வாய்

22-11-1993இல் (இன்று) நடைபெறும் வீட்டுக் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தற்போதைய முகவரி:
உதவி அரசாங்க அதிபர்
காரியாலய அருகில்
7-ம் கட்டை, மல்லாகம்

தாய், சகோதரர்கள்.

(6641)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு: | | வீரச்சாவு: |
|---|---|---|
| 1973 | | 1992 |
| -- | | -- |
| 12 | | 12 |
| -- | | -- |
| 27 | | 02 |



02-12-1992 அன்று எங்கள் தமிழீழ மண்ணின் எல்லையிலே ஏறிவந்த எதிரிகளைத் துவம்சம் செய்து வெங்களமாடி. வீரச்சாவடைந்த

## லெப்டினன்ட் ஜெயா
### (சண்முகராசா சிவகுமார்) *[தயா]*
### திதி: 22-11-93

எங்கள்குடி விளங்கவந்த எங்கள்குமரா

அண்ணன் ஜெயா பெயரைச்சூடி அணியில் இணைந்தாய்
ஆற்றல்மிகு வீரனாகப் படையில் திகழ்ந்தாய்
கண்ணெனவே தாயகத்தைக் காத்தேநின்றாய்
கயவர்களின் கதைமுடிக்கக் களங்கள் சென்றாய்
எண்ணமெல்லாம் எங்கள் மண்ணின் விடிவேயென்று
ஏந்திநின்றாய் சுடுகலனை என்றும்கையில்
மண்ணதிலே குருதிகொட்டி மகிழ்ந்தே வீழ்ந்தாய்
மைந்தாவுன் மாண்புகண்டோம் மறவோம் என்றும்.

8 ஏ, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

- குடும்பத்தினர்.

(6650)

---

நொச்சிக்குளம் - பன்குளம் - திருமலை)

**லோகன்** (இரத்தினசிங்கம் புவனேந்திரன் -கிளிவெட்டி, மூதூர் திருமலை)

**கப்டன் வதனன்** (தங்கராசா ராஜேஸ்வரன் - குமுழமுனை-மணலாறு)

**2-ம் லெப்.அருணா** (அந்தோனிப்பிள்ளை விஸ்வராஜ் அளம்பில் - மணலாறு)

**2-ம் லெப்.நிராஜ்** (செல்லத்துரை சிவநேசச் செல்வன் - நெடுங்கேணி - மணலாறு)

**2-ம் லெப். மகான்** (பாலசுந்தரம் பாலவரதன் முள்ளியவளை - முல்லைத்தீவு)

**டயானா** (கவிதா தங்கராசா - குகன் தோட்டம், அளம்பில் - மணலாறு)

**பெனாசிர்** (ஜமுனா சிவபாதலிங்கம் - 5-ம் கட்டை அளம்பில் - மணலாறு)

**அன்பழகன்** (மாயாண்டி பாலகிருஷ்ணன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**தனராஜ்** (சி ஆனந்தராஜ் - ஒட்டிசுட்டான் -முல்லைத்தீவு)

**பிரதீப்** (- ஆனந்தராஜ் - மணற்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**கரன்** (ச நவரத்தினம் - அளம்பில் - மணலாறு)

**ரமணன்** (ஜோசப் ஜெயரட்ணம்-பிரம்மந்தனாறு-விஸ்வமடு)

**ரூபன்** (சிவசாமி குமாரவேல்-விஸ்வமடு)

**மேஜர் திலீப்** (அழகுரத்தினம் விக்கினேஸ்வரன்--கனகராயன்குளம், ஓமந்தை-வவுனியா)

**கப்டன் ரஜனி** (பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை-அலைக்கல்லுப்போட்டகுளம், ஓமந்தை-வவுனியா)

**2-ம் லெப்.ஜஸ்ரின்** (மாணிக்கம் மானில்-கல்மடு, புளியங்குளம்-வவுனியா)

**நிர்மல்** (சந்தியாப்பிள்ளை சுஜிந்திரரூபன்-நேரியகுளம் வவுனியா)

**இராகவன்** (பழனியாண்டி செல்வராசா-இறம்பைக்குளம்-வவுனியா)

**டெனி** (நாகமணி குருகுலகுமார்-பூவரசங்குளம்-வவுனியா)

**கோணேஸ்** (பேபிசகிலா சுப்பையா - பாரதிபுரம்-கிளிநொச்சி)

**லிங்கம்** (முத்துலிங்கம் சோதிவேல்-வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**துஸ்கர்** (கிருஷ்ணசாமி இலட்சுமணன்-மயிலங்காடு-கிளிநொச்சி)

**அர்ச்சுனா** (மயில்வாகனம் ரவி - பாரதிபுரம் - கிளிநொச்சி)

**கண்ணன்** (சுப்பையா தேவர் துரைராசா-பொன்நகர்-கிளிநொச்சி)

**விசு** (வேலு சித்திரகுமார்- 2 -ம் வாய்க்கால்-கிளிநொச்சி)

**கப்டன் டோறா** (பத்மாவதி கந்தப்பு-உச்சி ஒழுங்கை, கரவெட்டி-யாழ்)

**2-ம் லெப்.சுபோ** (சுமதி கந்தையா-மட்டுவில் வடக்கு-சாவகச்சேரி)

**2-ம்லெப்.இலக்கணா** (பிறேமினி பாலச்சந்திரன் -நுணாவில் கிழக்கு, கல்வயல் -சாவகச்சேரி)

**2-ம் லெப்.வைதேகி** (சீதாலட்சுமி சின்னத்தம்பி-புலோலி மேற்கு, தம்பசிட்டி-பருத்தித்துறை)

**2-ம் லெப் .கிரிஜா** (இரத்தினவதி சுந்தரம்-கேணியடி, கரணவாய்மேற்கு-கரவெட்டி-யாழ்

**2-ம் லெப்.பொன்னி** (பிரமிளா செல்வமாணிக்கம்-பொலிகண்டி-வல்வெட்டித்துறை)

**மரிஸ்ரெலா** (ஜெனோ பிரான்சிஸ்-வெற்றிலைக்கேணி-வடமராட்சி கிழக்கு)

**விக்டோரியா** (புஸ்பராணி அன்ரன்-மயிலிட்டி, காங்கேசன்துறை- யாழ்)

**ரசிக்கா** (யாழினி சத்தியநாதன் - மகேந்திரன் வீதி, அரியாலை-யாழ்)

**கோமகள்** (சித்திரா சின்னத்தம்பி-கப்பூது, கரவெட்டி-யாழ்)

**பிரபு** ( --- --- )

சாவகச்சேரி, சங்கத்தானைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்ட

---

| | | | |
|---|---|---|---|
| தாயகம் | மீட்டிட | இன்னுயிர் | ஈந்தாய் |
| மாவீரர் | வாழ்வாகி | மண்தனை | காத்திட |
| மாங்குளத்தில் | விதையான | மங்கையே | ரசிக்கா |
| தங்கத் | தமிழீழம் | மலர்ந்திடும் | வேளையில் |
| தாயகம் | உந்தன் | பெயரையும் | உரைக்கும் |

9/6 மகேந்திரன் வீதி,
அரியாலை.

- குடும்பத்தினர்

(6659)

---

## வீரவணக்கம்





## லெப்.கணேஷ் 2-ம்லெப்.தினேஷ்

செல்வன் | செல்வன்

தி. டொமினிச்சாந்தன் தி. அன்ரன்தினேஷ்

05. 08. 1964 ◀ பிறப்பு : ▶ 13. 06. 1969

21. 11. 1986 ◀ வீரச்சாவு: ▶ 27. 11. 1989

''உங்கள் சுவடுகளில் தொடரும் எங்கள் பாதங்கள்''

''சாந்திநேஷ்''
பளை

குடும்பத்தினர், நண்பர்கள்.

(சி-7973)

---

துப்பாக்கிச்சூட்டில் பலியான பொதுமகன்.

1991ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் பகுதியில் நிகழ்ந்த சிறிலங்கா இராணுவமுகாம் காவலரண்கள் தகர்ப்பின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் பிரபா** (செல்வரெட்ணம் செல்வகுமார் சுங்கத்திணைக்களவீதி, முல்லைத்தீவு)

**தங்கன்** (செல்வரட்ணம் கருணாகரன் - சங்கத்தார் வயல் இயக்கச்சி- கிளிநொச்சி)

ஆனையிறவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -

**குலேந்திரன்** ( கார்த்திகேசு சசிகரன் கரம்பைக்குறிச்சி வரணி-கொடிகாமம்)

**பெரியதம்பி/பேரழகு** (தங்கவேல் தங்கேஸ்வரன் சமரபாகு வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள்ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-7967)

### சிந்தனைக்கு

தங்கள் வழியைத் தாங்களே கண்டு தேர்ந்தெடுத்துச் செல்வதே சான்றோர்கள் பின்பற்றும் வழியாகும்.

- ஸென் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## சிக்கல் பெயரிடுவதல்ல!

குழந்தையை சுலபமாகப் பெற்றுவிடலாம். ஆனால் குழந்தைக்குரிய பெயர் சூட்டுவதுதான் சிரமம் என்பது போல் உள்ளது ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளரும், சுற்றாடல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சருமான விமல் விக்கிரமசிங்காவின் பேச்சு.

அதாவது, 'சமஷ்டி' என்ற சொற் பிரயோகமே சிங்கள மக்களை வெறுப்படையச் செய்கின்றது. அந்தச் சொல்லை நீக்கிவிட்டு வேறு ஏதாவது பதத்தைப் பயன்படுத்தி சமஷ்டிக்கு மேலான அதிகாரத்தைக் கூட தமிழருக்கு வழங்கலாம் என்பதே அமைச்சர் விமல் விக்கிரமசிங்காவின் அப்பேச்சாகும்.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்காவின் இக்கூற்று விநோதமானதும், வேடிக்கையானதும் ஆகும். அத்தோடு, சிங்கள மக்களை மூடர்கள் எனக் கருதுவதற்கும் ஒப்பானதாகும். அதாவது சிங்கள மக்கள் பாலென்று சொல்லிக் கள்ளைக் கொடுத்தாலும் குடிக்கக் கூடியவர்கள் எனக் கூறுவது போன்றதாகும். ஆனால், கடந்தகாலத்தில் சிலவிடயங்களில் சிங்கள மக்கள் அவ்வாறு நடந்து கொண்டதும் உண்டு. குறிப்பாக தமிழர் விடயத்தில் முழுமையாக அவ்வாறே நடந்து கொண்டுள்ளனர்.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவிப்பது போன்று சிங்களவர்களுக்கு சமஷ்டி என்பது வேப்பங்காய் போன்றது என்பதில் சந்தேகமில்லைத்தான். ஆனால் சமஷ்டிக்கு கூடிய அதிகாரங்கள் கொண்ட அமைப்பொன்றை சிங்கள மக்களை ஏமாற்றி தமிழருக்கு வழங்க முடியும் என்பது மற்றொரு ஏமாற்று மட்டுமல்ல. நடைமுறைக்கு அப்பாற்பட்டதுமாகும்.

ஏனெனில், சிங்களப் பேரினவாத சக்திகளில் கணிசமான 'புத்திஜீவிகள்' உள்ளனர். அவர்கள் இனப்பிரச்சினை குறித்து அரசின் நடவடிக்கை பற்றி உன்னிப்பாகக் கவனித்தும் வருகின்றார்கள். அவர்கள் இதுவரை எடுத்துவந்த சமாதான முயற்சிகளை தடுத்தும் வருகின்றனர். இந்த வரிசையில் அமைச்சர் தொண்டமான் உட்பட பலரது முயற்சிகள் இச்சக்திகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

ஆனால், அமைச்சர் தொண்டமான் கொண்டுவந்த சமாதானத் திட்டத்திலோ, அன்றி ஏனையவர்கள்

# திருக்கேதீஸ்வரம் ஆலயப் பாதிப்பு இந்துக்களுக்கு பெரும் கவலை

### விஷ்வ இந்து பரிசத் அறிவிப்பு

(கொழும்பு)

திருக்கேதீஸ்வரம் திருக்கோவிலுக்கு ஆயுதப்படையினரால் கணிசமான அளவு சேதம் ஏற்பட்டிருப்பதால் இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் இருக்கும் இந்துக்கள் பெரும் கவலையடைந்துள்ளதாக விஷ்வ இந்து பரிசத் கூறியுள்ளது. இது தொடர்பாக விஷ்வ இந்து பரிசத்தின் பொதுச் செயலாளர் அசோக் சிங்ஹால் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு அனுப்பியுள்ள மகஜர்ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையிலுள்ள புகழ்பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் திருக்கோவிலுக்கு படையினரால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தத்திருக்கோவிலுக்கும்அதன் அருகேயுள்ள சொத்துக்களுக்கும், சேதம் ஏற்பட்டிருப்பது மட்டுமன்றி கணிசமான அளவு சொத்துக்களும் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இலங்கையில்உள்ள இந்துக் கோயில்களை பூரணமாகப் பாதுகாக்க வேண்டும் என்றும், புனிதத் தன்மையை கெடுத்தல் மற்றும் சேதமாக்கல் மற்றும் அபகரித்தல் என்பவற்றிலிருந்து அவற்றைக் காக்க வேண்டும் எனவும் விஷ்வ இந்து பரிசத் தனது மகஜரில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

## கடற்படையால் கைதானவர் இல்லையென இப்போது அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட யாழ் வாசி ஒருவர் தற்போது தம்மிடம் இல்லை என்றும் வேண்டுமானால் அவருக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் பெற ஏற்பாடுகள் செய்யலாம் என்றும் அவரின் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த குலசிங்கம் என்ற வாலிபர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் குருநகருக்கும் மண்டைதீவுக்கும் இடைப்பட்ட கடற் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்கா கடற் படையினரால் கைது செய்யப்பட்டார், என்பது குறிப்பிடத்தக்கது.

இது வரை காலமும் இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக விசாரித்தபோது மௌனமாக இருந்துவிட்டு கடந்த வாரம் மேற்படி மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதாக சிறிலங்கா படையினர் தெரிவித்துள்ளனர். இவர் கைது செய்யப்பட்ட பின்னர் இவருக்கு என்ன நடந்தது என்பது ஒரே மர்மமானதாக இருப்பதாக அவரின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர் (நி)

## நெருப்புக்காய்ச்சல் பரவுகிறது

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் தற்போது நெருப்புக்காய்ச்சல் பரவி வருகின்றது. சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்து தரப்பினருமாக சுமார் இருபத்தைந்து பேர் வரையில் இக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன் குடியிருப்பில் இக் காய்ச்சல் பரவியபோது பீடிக்கப்பட்டு குணமடைந்த சிலர்தற்போது அதனால் பீடிக்கப்பட்டுள்ளனர். (22)

## அரசு இதயசுத்தியுடன் தீர்வை முன்வைப்பின் எதிர்க்கட்சி உதவும்

### சுதந்திரக் கட்சி செயலாளர்

(கொழும்பு)

''இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் இதய சுத்தியுடன் அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமானால் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு பாராளுமன்றத்தில் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப்பெற்றுக் கொடுக்க எனது கட்சி தயாராகவுள்ளது''

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார். 'சந்தேசிய' வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்,

''பாராளுமன்றதெரிவுக்குழு முன்னிலையில் இனப்பிரச்சினைக்கான தனது யோசனையை முன்வைத்து சுயரூபத்தை வெளிக்காட்ட ஐக்கிய தேசியக் கட்சி தயங்கியது. இவ்வாறான ஒரு கட்சி மீது நம்பிக்கை கொள்வது எப்படி?

''ஆனால்சிறிலங்காசுதந்திரக் கட்சி சில திட்டங்களை முன் வைத்தது தெரிவுக்குழு மூலம் நாம் நல்ல ஒரு தீர்வு வரும் என எதிர்பார்த்தோம். ஐக்கிய தேசியக்கட்சியுடனும் ஏனைய கட்சிகளுடனும் ஒன்றிணைந்து அரசியல்வேறுபாடின்றி ஒரு தீர்வை காணலாம் என நாம் எண்ணினோம். ஆனால் அரசாங்கம் அதனை முறியடித்து விட்டது'' என்றார்.

## பாடசாலையில் ராணுவ முகாம்

சிலாபத்தில் இரணவில பகுதியில் உள்ள மாதம்பே சேனநாயக்க மத்தியமகாவித்தியாலயத்தில் ''வொய்ஸ்ஒவ் அமெரிக்கா'' ஒலிபரப்புநிலையத்தின் பாதுகாப்பிற்கென இராணுவ முகாம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புத்தளம் மாவட்டத்தில் முன்னர் புலிகள் நடாத்திய தாக்குதலையடுத்து இம் முகாம் அமைக்கப்படுவதாக கூறப்பட்டபோதிலும் உண்மையில் வானொலி நிலைய பாதுகாப்பிற்காகவே இம் முகாம் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தலுக்கான சூழ்நிலை கிழக்கில் தற்போது இல்லை

--அஷ்ரப்

(கொழும்பு)

